DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.12

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.மாரிமுத்து | Caste: | |
| Father's Name | : அழகர் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 12.20 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. கடந்த 2011ம் வருடம் சுகன்யா சேம்பருக்கு வேலைக்கு சென்றதாகவும், வேலைக்காக உலக்குடியைச் சேர்ந்த புரோக்கர் ஒருவர் மேற்படி சேம்பருக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு 12 குடும்பங்கள் சேம்பரில் செங்கல் மற்றும் கல் அறுக்க சென்றதாகவும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பணமாக ரூ.20,000/– ரூ.30,000/– கொடுத்தாகவும், நான் ரூ.30,000/–முன் பணம் பெற்று வேலைக்கு சென்றதாகவும், சேம்பர் உரிமையாளர் மூர்த்தி என்பவர் அந்த பணத்தை திரும்பி வாங்கி கொண்டு அங்கு ஓய்வின்றி வேலை செய்ததாகவும், வாரத்தில் 500 முதல் 700 வரை சம்பளம் தந்து கல் அறுக்கும் அளவிற்கு சம்பளம் வழங்கியதாகவும் போலீசார் விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரியல்ல.

2. ஒரு நாளைக்கு ரூ.2,000/– வேலை செய்தால் அதில் முன்பணமாக பெற்ற தொகையிலிருந்து ரூ.1,500/–யை கழித்துக் கொண்டு ரூ.500 மட்டும் கொடுத்ததாகவும், ஊருக்கு செல்ல வேண்டும் என்றால் அங்கிருந்து ஒருவர் மட்டுமே செல்ல வேண்டும் என்று இருந்ததால் எங்களுக்கு சிரமமாக இருந்ததாகவும், அங்கு வேலை பார்த்த கார்த்தி என்பவரை முதலாளி அடித்ததால் அவர் ஊருக்கு சென்று

விட்டதாகவும், பின்னர் அவர் அதிகாரிகளிடம் கூறியதன் பேரில் அரசு அதிகாரிகள் அங்கு வந்து எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து பின்னர் திருச்சுழிக்கு அழைத்துச் சென்று அதன் பிறகு எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்ததாக போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. சேம்பரிலிருந்து அனைத்து குடும்பத்தையும் மீட்டு வாகனத்தில் அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். காவல் நிலையம் சென்று அன்றைய தினம் இரவு 11.00 மணியளவில் திருச்சுழி மஹாலுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து அதிகாலை 02.00 மணியளவில் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அவ்வாறு விடுவித்ததற்கு சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. எங்கள் குடும்பத்திற்கு ரூ.1000/– வீதம் கொடுத்தார்கள். வேறு எந்த உதவியும் பெறவில்லை என்றால் சரிதான்.

4. அங்கு நான் வேலை செய்ததற்கு என்னிடம் ஆவணம் எதுவும் இல்லை என்றால் ஒரு நோட்டு இருந்தது. அதை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. எனது வீட்டில் உள்ளது. சேம்பரின் உரிமையாளர் யார் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் இருந்ததா என்றால் என்னிடம் இல்லை.

5. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.